257

பெறுநர்

மாவட்ட ஆட்சி தலைவர் அவர்கள்,
கோயம்புத்தூர் மாவட்டம்,
கோயம்புத்தூர் -18.

அனுப்புநர்

க.சபாபதி, பி.இ.,
நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ),
கோவை மண்டலம்,
மாநகராட்சி வணிக வளாகம்,
டாக்டர் நஞ்சப்பா சாலை,
கோவை - 18.

ந.க.எண்.4232/2011 கோம 3

திருவள்ளுவர் ஆண்டு 2044,
ஸ்ரீ விஜய வருடம், ஆவணி...
நாள் :05.09.2013

ஐயா,

பொருள் : கட்டிடம் நகர் ஊரமைப்பு துறை - கோவை மண்டலம் - கோவை தெற்கு வட்டம் - இக்கரை போளுவாம்பட்டி கிராமம் - நில அளவை எண்.85 மற்றும் 86-ல் கட்டப்பட்டுள்ள தியானலிங்க யோக கோவில் - புலத்தணிக்கை அறிக்கை சமர்ப்பிப்பது - குறித்து.

பார்வை :
1) மாவட்ட ஆட்சியர், கோவை மாவட்டம் அவர்கள் கடிதம் ந.க.எண்.14502/2013/இ2 நாள்.03.07.2013.
2) இவ்வலுவலக அனுமதியற்ற கட்டுமான அறிவிப்பு ந.க.எண்.1866/2012/CR 4, நாள்.05.11.12 மற்றும் Locking and Sealing அறிவிப்பு 21.12.12 மனுதாரருக்கு சார்பு செய்யப்பட்டது.
3) மாவட்ட வன அலுவலர் கோவைக் கோட்டம் அவர்கள் கடிதம் ந.கஎண்.8120/2011/வ1, நாள்.22.02.2013.
4) இவ்வலுவலக கடிதம் ந.க இதே எண் நாள்.08.05.13-ல் Revision Petition மீது பத்திவாரி குறிப்புகள் நகர் ஊரமைப்பு ஆணையருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

-------

பார்வை 1-ல் கண்டுள்ள மாவட்ட ஆட்சியர் அவர்கள் கடிதத்தில் தியானலிங்க யோக கோவிலுக்கு தடையின்மை சான்று கோரி விண்ணப்பித்துள்ளதாகவும், இது தொடர்பாக புலத்தணிக்கை செய்து இவ்வலுவலக அறிக்கையினை வழங்கிட தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி இம்மனையிடம் நேராய்வு செய்யப்பட்டு பின் வரும் குறிப்புகள் சமர்ப்பிக்கப்படுகிறது.

இத்தியானலிங்க வளாகம் 02.08.2013 அன்று இட நேராய்வு செய்யப்பட்டது. உடன் மனுதாரரின் முகவர் இருந்தார்கள்.

கோவை மாவட்டம், கோவை தெற்கு வட்டம், இக்கரை போளுவாம்பட்டி கிராமம், க.ச.எண்.48/1,2, 49, 50/1 மற்றும் பலவற்றில் மொத்த மனைப்பரப்பு 109.00 ஏக்கரில் ஈசா யோக மையம் அமைந்துள்ளது. இதில் மொத்தம் 50 கட்டிடங்கள் 60470.00 சமீ பரப்புடன் கட்டப்பட்டும், மேலும் 12 கட்டிடங்கள் 40466.00 சமீ பரப்புடனும், 15 கட்டிடங்கள் 16477.00 சமீ பரப்புடனும் கட்டி முடிக்கப்பட்டு பணிகள் முடிவடையும் தருவாயிலும் அமைந்துள்ளன.

..2..

இவை மலையிடப் பகுதியில் அமைவதால் இதன் பொருட்டு HACA ஒப்புதல் எதுவும் பெறப்படாமல் உள்ளதால் பார்வை 2-ல் கண்டுள்ள இவ்வலுவலக அனுமதியற்ற கட்டுமான அறிவிப்புகள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது.

இவ்வளாகத்தின் தென்புற எல்லையையொட்டி, வளாகத்தினுள் பின்வரும் தியானலிங்க வழிபாட்டு கட்டிடங்கள் அமைந்துள்ளன.

1. தியானலிங்க மண்டபம்
2. லிங்க பைரவி கோவில்
3. யோக பயிற்சி மையம்
4. பெண்கள் குளியலறை.
5. கழிவறை மற்றும் ATM அறை ஆகியவை அமைந்துள்ளன இவை தவிர மேலும் கிழக்கு பகுதியில்,

    1.தீர்த்த குண்ட கட்டிடம்
    2. ஆதியோகி ஆலயம்
    3.தாமரைக் குளம் ஆகியவை கட்டுமான பணிகள் முடிவடையும் நிலையில் உள்ளன.

இத்தியானலிங்க வளாகத்தின் எல்லையைச் சுற்றி,

வடபுறம் : வாகனம் நிறுத்துமிடம் மற்றும் ஈசா யோக மைய கட்டிடங்கள்

கிழக்குபுறம் : 9.00 மீ அகல inner drive way மற்றும் அதனை அடுத்து தாமரைக் குளம், கட்டப்பட்டு வரும் தீர்த்த குண்டம் மற்றும் ஆதியோகி ஆலயக்கட்டிடங்கள்.

தெற்குபுறம் : காப்புக் காட்டு (Reserved forest) எல்லை மற்றும் அதனை ஒட்டி காப்புக்காட்டுக்குள் அமைந்துள்ள 9.00 மீ அகல சரளைச்சாலை.

மேற்குபுறம் : 9.00 மீ அகல inner drive way மற்றும் ஈசா யோக மையக்கட்டிடங்கள், தொடர்ந்து 450‘0“ அடி தொலைவு வரை மனுதாரர் மனையிடம் அதனை அடுத்து வனத்துறை சரளைச்சாலை, காப்பு காடுகள் ஆகியவை அமைந்துள்ளன.

இத்தியானலிங்க வளாகத்தினுள், தெற்கு எல்லையை ஒட்டி லிங்க பைரவி ஆலயக்கட்டிடம், பக்க இடைவெளியின்றி கட்டப்பட்டுள்ளது. இது குறைந்தபட்ச அளவான 3.00 மீ இன்றி விதி பாதிப்புடன் உள்ளது.

இத்தியானலிங்க கட்டிடங்களுக்கு அணுகு வழியாக, தென்புற எல்லையை ஒட்டி 9.00 மீ அகல வனத்துறை சாலையும் மற்றும் கிழக்கு பகுதியில் கட்டப்பட்டு வரும் தீர்த்தகுண்ட கட்டிடங்களையொட்டி மற்றும் ஒரு 12.00 மீ அகல ஊராட்சி மண்சாலையும் இரு அணுகு வழிகள் அமைந்துள்ளன. இவற்றுக்கான வாகன நிறுத்துமிடம்,

இவ்வளாகத்தின் வடபுறம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் கிழக்கு எல்லைய ஒட்டி, நிலையிலுள்ள ஊராட்சி சாலையினை அடுத்துள்ள மனுதாரர் மனையிடத்திலும் ஒரு வாகன நிறுத்துமிடப்பரப்பு அமைக்கப்பட்டுள்ளது.

பார்வை 3-ல் கண்டுள்ள வனத்துறையினரின் கடிதத்தில், ஈசா அறக்கட்டளை வழியாக தாணிக்கண்டி மலை வாழ் மக்கள் குடியிருப்புக்கு செல்லும் வனச்சாலையின் மொத்த நீளம் 2.50 கிலோ மீட்டர் எனவும் அகலம் 3.50 மீ எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் வனத்துறையினரின் இடத்தில் அமைந்துள்ள ஈசா யோக மையத்திற்கு செல்லும் சாலை, தற்போது 30‘0“ (9.00 மீ) அகலம் உள்ள சரளைச் சாலையாக அமைக்கப்பட்டு புழக்கத்தில் உள்ளது.

இத்தியானலிங்க கட்டிடங்களையும் சேர்த்து, இவ்வளாகத்தினுள் உள்ள அனைத்து கட்டிடங்களும் அவை மலையிடப் பகுதியில் அமைவதால், அதன் பொருட்டு HACA ஒப்புதல் எதுவும் பெறப்படாமல் உள்ளது. இதன் பொருட்டு இவ்வலுவலக Locking & Sealing அறிவிப்பு 21.12.12-ல் சார்பு செய்யப்பட்டுள்ளது.

ஆனால் மனுதாரர் கட்டிடப் பணியினை இதுவரை நிறுத்தாமலும், இதற்கான ஒப்புதல் கோரி முழுமையாக விண்ணப்பிக்காமலும், மறு சீராய்வு மனு ஒன்றினை நகர் ஊரமைப்பு ஆணையருக்கு நேரடியாக சமர்ப்பித்துள்ளார்கள். இது தொடர்பாக பார்வை 4-ல் கண்டுள்ள இவ்வலுவலகம் மூலமாக Revision petition பத்திவாரி குறிப்புகள் ஏற்கனவே நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இம்மனுவும், வேறொரு மனுதாரர் திரு.வெற்றி செல்வன் என்பவர் இம்மையத்தின் மீது துறைவாரியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தெரிவித்து தற்போது சென்னை உயர் நீதி மன்றத்தில் வழக்கு ஒன்று தொடர்ந்தும், இவை இரண்டும் தற்போது நிலுவையில் உள்ளன.

கட்டிடங்கள் மதவழிபாட்டு கட்டிடங்கள் ஆகையாலும், சம்மந்தப்பட்ட இடம் HACA -வினால் அறிவிப்பு செய்யப்பட்ட மலையிடப் பகுதியில் அமைவதாலும், உரிய துறைகளிடமிருந்து தடையின்மை சான்று/ ஒப்புதல் பெறப்பட்ட பின்னரே கட்டப்பட்டிருக்க வேண்டும். ஆனால், கட்டிடங்கள் உரிய துறைகளின் ஒப்புதலின்றி கட்டப்பட்டுள்ளதாலும், விதிகள் பாதிப்புடன் (கட்டிடங்கள் காப்புக்காடு எல்லையை ஒட்டி திறவிடம் ஏதும் விடப்படாமல்) கட்டப்பட்டுள்ளதாலும், மனுதாரர் கட்டப்பட்ட கட்டிங்களுக்கு ஒப்புதல் வேண்டி விண்ணப்பித்ததாலும், இவ்வலுவலகம் நிராகரிக்க வேண்டிய நிலையில் உள்ளது என்ற விவரம் பணிவுடன் சமர்ப்பிக்கப்படுகிறது.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர்(பொ)
கோவை மண்டலம்.

<u>இணைப்பு</u>
பார்வை 3 மற்றும் 4-ல் கண்டுள்ள — உண்மைநகல் —
கடித நகல்கள்.

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ)
23.1.16 கோவை மண்டலம்.

To

The District Collector,
Coimbatore District,
Coimbatore -18

From
K. Sabapathy, B.E.,
Deputy Director of Town and Country Planning(I/C)
Coimbatore Region,
Corporation Commercial Complex,
Dr. Nanjappa Salai,
Coimbatore -18

R.C.No.4232/2011 CR3

Tiruvalluvar Year 2044
Sri Vijaya year Avani
Date.3.9.2013

Sir,

Sub: Building Town and Country Planning Department –Coimbatore Region –South Taluk –Ikkarai Boluvampatti village –the DhyanalingaYoga Temple constructed in survey nos.85 and 86 – Submission of Field Inspection Report –Reg

Ref: 1.Letter by District Collector, Coimbatore District R.C.no.14502/2013/E2 dated 3.7.2013

2.Notice for Unauthorized construction from this office R.C.no.1866/2012/CR4,dated 5.11.2012and the Notice for Locking and Sealing dated 21.12.12.served to the petitioner

3. Letter from the District Forest officer, Coimbatore Division R.C.no.8120/2011/T1 dated 22.2.2013

4. Letter from this office having same R.C.no, and dated 8.5.2013 in that , the Para wise remarks on the Revision petition was submitted to the Commissioner, of the Town and Country planning Authority.

In the letter sent by the District Collector cited in the Ref 1 above it was mentioned that it was requested to issue the No Objection Certificate for the Dhyanalinga Yoga Temple and hence it was requested to conduct the field Inspection and submit the Report from this office. Accordingly the said site was inspected in person and the following report is submitted.

The Dhyanalinga Complex was conducted the inspection in person on 2.8.2013.The agents of the petitioner was there with us.

The Isha Yoga Center was situated in a total extent of 109.00Acre of land comprised in survey Nos. 48/1, 2, 49, 50/1 and also in further other survey

numbers, situated in Ikkarai Boluvampatti village, Coimbatore South Taluk, Coimbatore District. In this land there are 50 buildings constructed with an extent of 60470.00Square meter, and further 12 buildings with an extent of 40466.00square meter and 15 buildings with an extent of 16477.00square meter and the construction is in the completing stage.

Since they are in the Hill area and since they have not obtained any approval from the HACA, the notice for unauthorized construction was already issued from this office as cited in Ref 2 above.

Adjacent to the south side of this complex the following Dhyanalinga Worshipping buildings are there.

1. Dhyanalinga Hall

2. Linga Bhairavi Temple

3. Yoga Training Center

4. Ladies Bathroom

5. Toilet and ATM Room are situated. Apart from this further in the east side, there are:

1. Theertha Kund Building

2. Athiyogi Shrine

3. Lotus pond etc., are in the stage of completing the construction.

Surrounding the border of this Dhyanalinga Complex is:

| | |
|---|---|
| In the North side : | Vehicle parking area and the Isha Yoga Center Buildings |
| In the East Side: | Inner Drive way having 9.00meter width, and adjacent to it is the lotus pond, constructing TheerthKund, and the Athiyogi Shrine |
| In the South Side: | Reserved Forest border and the 9.00meter gravel road having width of 9.00meter adjacent to it in the Reserved Forest. |

In the West side: Inner Drive way having 9.00meter width, and Isha Yoga Center Buildings

And in continuation to it is the petitioners site to a distance of 450'00"feet, and adjacent to it is the gravel roads of the Forest Department, and the Reserved Forest are situated.

Adjacent to the south side border of this Dhyanalinga Complex, the Linga Bhairavi temple building is constructed without leaving any side space. This is affected the Rule of leaving a space of minimum 3 meters.

The 9.00meter width Forest Department road from the south side is there as the approach road for this Dhyanalinga Buildings, and another one Panchayath mud road having 12 meter width adjacent to the Theerthkund buildings constructing in the east side and thus there are two approach ways to this. The parking space for this is situated in the North side of this complex. Further another one parking space is formed in the land of the petitioner adjacent to the existing Panchayath Road, in the eastern side border.

In the letter sent by the Forest Department cited in Ref 3 above, it is informed that the total length of the forest road is 2.50kilo meter and the width is 3.50 meter which is going to the residential area of the Thanikandi Tribal people through the Isha Trust .But the road which is going to the Isha Yoga center situated in the area of the Forest Department are now formed into a gravel road having 9.00, meter width and is under use.

Including these Dhyanalinga buildings, all the buildings situated within this complex are situated in the Hill area, no approval has been obtained for them from HACA. Due to this the notice of Locking and Sealing of this office was served them on 21.12.12.

But the petitioner without stopping the construction till this, and without applying seeking approval for this fully, has submitted a Revision petition directly to the Commissioner of Town and Country planning Authority. With respect to this this office has sent the Para wise remarks for the Revision petition in the letter of this office cited in Ref 4 above has been sent to the Commissioner, Town and Country planning Authority. Now apart

from this petition, another one petitioner by name Mr. Vetri Selvan, has filed a case before the High Court of Madras for conducting a Departmental enquiry against this center, and these two petitions are now pending.

Since the buildings are the Religious in nature, and the concerned place is coming under the Hill area notified by the HACA, the buildings would have been constructed only after obtaining the approval/No Objection Certificate from the appropriate Authorities. But, since the buildings are constructed without the approval of the appropriate authority, and are constructed violating the Rules (Constructed the buildings adjacent to the Reserved Forest without leaving any open space) and since the petitioner has applied for the approval for the buildings constructed it is humbly submitted that this office is under the situation of rejecting the same.

Deputy Director,
Town and Country Planning (I/C)
Coimbatore Region

Encl:

Copies of the letters 3 and 4 cited in Ref above

True copy

Sd/-
Deputy Director,
Town and Country Planning (I/C)
Coimbatore Region
(Signed with seal)